**அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை திரு.என்.ராஜமாணிக்கம்.,எம்.ஏ.,**

ந.க.எண்.360/2026/எப்1 நாள்:25.02.2026

**பொருள்:** மனைப்பிரிவு அனுமதி - அருப்புக்கோட்டை நகராட்சி - வார்டு F, பிளாக்எண் 8, நகரளவைஎண் 10/2,3 A, 0.965 ஏக்கர் (3909.00 ச.மீ) பரப்பளவு உள்ள இடத்திற்கு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

**பார்வை:**1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் செயல்முறை ஆணை ந.க எண் TIQPMQ4O/2026/TCP நாள்:04.02.2026

2. நகர் மன்ற முன் அனுமதி நாள்:25.02.2026.

----------------------

அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு F, பிளாக் 8, நகரளவை எண் 10/2,3 A, 0.965 ஏக்கர் (3909.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி இணையதளம் வாயிலாக நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களுக்கு தங்களால் விண்ணப்பம் செய்ததன் பேரில் சாலை வடிவமைப்பு வரைபடம் நாள்.18.12.2025ல் நகர் ஊரைமப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 7491/2025 நாள்.20.12.2025ம் தேதிய ஆவணம் மூலம் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்டு மேற்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு பதிவு செய்யப்பட்டு நகராட்சியில் அசல் கிரைய ஆவணம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

மேலும் பார்வை 1ல் கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களின் கடிதத்தில் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு வரைபட எண் ம.வ/ந.ஊ.து.இ.(விருமா) எண் 22/2026 நாள்.04.02.2026ல் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு ஒப்புதல் குறித்த விபரங்கள் மற்றும் சாலை ஒப்படைப்பு விபரங்கள் பார்வை 2ல் கண்ட இந்நகர் மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி
25.2.26

**இணைப்பு:-**
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

**பெறுநர்:-**
S.சித்ராதேவி ,
க/பெ.சுப்புராஜ்,
1/561,ஜெயராம் நகர்,
அருப்புக்கோட்டை.




Signature valid

அளவர்/உதவி வரைவாளர் வரைவாளர் நிலை- III மேற்பார்வையாளர் உதவி இயக்குநர்

## நகர் ஊரமைப்பு துறை - விருதுநகர் மாவட்டம்

## அருப்புக்கோட்டை நகராட்சி

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி ,வார்டு: F , பிளாக் : 8, நகரளவு எண்:-10/ 2,3A -இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டப் பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: TIQPMQ4O
அளவு : 1:400

வ

**குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 0.96.50 ஏக்கர் (அ) 3909.00 ச.மீ |
| மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட | - | 1834.45 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 2074.55 ச.மீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | - | |
| நிலையிலுள்ள சாலை | - | |
| மனைப்பிரிவு சாலை | - | |
| 12.0 மீ அகல திட்ட சாலை (F4)-(F4) | - | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | - | 25 எண்ணம் |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | - | 22 எண்ணம் |

**பொது ஒதுக்கீடு:** (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது.)
(நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்:4367/2019 நாள்: 05.02.2020 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் -2019 விதி எண்: 41(1) மற்றும் 47(6) ன்படி 10 % பூங்கா பரப்பளவிற்கு இணையான கட்டணத் தொகையினை அரசு வழிகாட்டு மதிப்பின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டது.

உள்ளாட்சி உபயோகத்திற்கு -16.34ச.மீ (0.79 %) =
தான ஆவண எண்: 7491/2025(நாள்:20-12-2025)

தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு - 13.39ச.மீ (0.64 %) =
தான ஆவண எண்: 7490/2025(நாள்:20-12-2025)

**மூலை முடக்கு**

12.00மீ அகலச்சாலைகளுக்கு வரை 1.50மீ X1.50மீ விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1.அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை(MA-1)நாள்:04.02.2019-ன் படி. உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

2.அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை(MA-1)நாள்:31.01.2020-ன் படி. உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன்,இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை எனவும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர். அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் -பட்டா -தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப் பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

8.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை அந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

9.நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல

10.இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்படக்கூடாது.

**குறிப்பு :**
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.து.இ.(விருமா)எண்: 22/2026

துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்